பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 03 வெள்ளிக்கிழமை 19.11.2021 கதிர் 14

**இது ரகசியம் அல்ல!**

ராஜபக்ஷக்களைப் பொறுத்த வரை நேற்றைய தினம் – நவம்பர் 18 – முக்கியநாள். மெதமுலன குடும்பத்தின் அரசியல் மையவிசையாக விளங்கும் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினம் இது. இப்போது 77ஆவது வயதில் அவர் காலடி எடுத்து பக்கம்02 »

# உள்ளூராட்சி சபைகளின் பதவி மேலும் ஓராண்டுக்கு

## டிசெ.6 இல் வர்த்தமானி அறிவிப்பு வருமாம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவம்பர் 19

இலங்கையில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுள் காலம் மேலும் ஓர் ஆண்டுக்கு நீடிக்கும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் டிசம்பர் 6ஆம் திகதி வெளிவரவுள்ளது என கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. ☞2



யுத்தம் முடிந்து 12 ஆண்டுகளாகியும் இலங்கையில் பொறுப்புக் கூறல் நிலை நிறுத்தப்படாமையால், இலங்கையில் நீதி மற்றும் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்த சர்வதேச ஒத்துழைப்பை வலியுறுத்தும் தீர்மானம் (413 ஆம் இலக்கத் தீர்மானம்) ஒன்று கடந்த மே மாதம் அமெரிக்க காங்கிரஸில் கொண்டு வரப்பட்டது. அந்த இரு தரப்புத் தீர்மானத்துக்கான பிரேரணையை முன்நகர்த்திய அமெரிக்க காங்கிரஸின் பெண் உறுப்பினர் டிபோரா கே றொஸ் அம்மையாரை வொஷிங்டனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும், உலகத் தமிழர் பேரவையினதும் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் சந்தித்த போது...



கூட்டமைப்பு – உலகத் தமிழர் பேரவை பிரதிநிதிகள் குழு அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதியும் காங்கிரஸினரின் கறுப்புக் குழும உறுப்பினருமான டனி கே டேவிஸுடனான சந்திப்பு சமயம்....



கூட்டமைப்பு – உலகத் தமிழர் பேரவை பிரதிநிதிகள் குழு அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் பிரட் ஷேர்மனுடன் கலந்துரையாடிய சமயம்....

## அமைச்சுக்களின் நிறுவன கட்டமைப்புகளில் திருத்தம்

### கோட்டாபய அதிரடி

அமைச்சுக்கள் சிலவற்றின் நிறுவன மற்றும் சட்ட கட்டமைப்பைத் திருத்தியமைத்துப் புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு நவம்பர் 17ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, தேசிய முன்னுரிமை வேலைத்திட்டத்தின் கீழ் நிறுவன மற்றும் சட்ட கட்டமைப்பில் ஜனாதிபதி செயலகம் திருத்தம் மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய, பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் நிறுவன மற்றும் சட்ட கட்டமைப்பு திருத்தப்பட்டுள்ளது. ☞2

## நேற்று 737 பேருக்கு கொரோனா உறுதி

இலங்கையில் நேற்று 737 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 54 ஆயிரத்து 459 ஆக எகிறியுள்ளது.

அதேவேளை, கொரோனாத் தொற்றால் ☞2

## இந்தியத் தூதர் இல்லத்தைப் படமெடுத்த பாகிஸ்தான் பிரஜைகள் மூவர் சிக்கினர்!

கொழும்பு – தர்ஸ்டன் வீதியில் உள்ள இந்தியத் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தைப்படம் எடுத்த பாகிஸ்தான் பிரஜைகள் மூவர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி மூவரும் ஓட்டோவில் பயணித்தபோது குறித்த இல்லத்தைப் படம் எடுத்தமையுடன், ஒளிப்பதிவும் செய்துள்ளனர் என்று கொள்ளுப்பிட்டிப் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய சந் தேகநபர்கள் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட அவர்களுக்கு, எதிர்வரும் 25ஆம் திகதி வரை நாட்டை விட்டு வெளியேறத் தடைவிதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## கொரோனாத் தொற்றால் 15 பேர் பரிதாப மரணம்

இலங்கையில் மேலும் 15 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் மரணமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 15 உயிரிழப்புகளில் 5 பெண்களும், 10 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து ☞2

## நீதிமன்றத் தடை உத்தரவுடன் வீடு வீடாகத் திரியும் பொலிஸ்



(வவுனியா நிருபர்)

மாவீரர் வாரத்தை நினைவு கூருவதற்குப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு அமைய வவுனியா நீதிமன்றதத்தால் விதிக்கப்பட்ட தடை உத்தரவுக் கட்டளையைக் உரியவர்களுக்கு வழங்குவதற்காகச் சரியான முகவரிகள் இன்றி ☞2

## இந்தியப் பிரதிநிதியுடன் சுமந்திரன் சந்திப்பு

நேற்று வொஷிங்டனில் இருந்து நியூயோர்க் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. தலைமையிலான கூட்டமைப்பு – உலகத் தமிழர் பேரவை குழுவினர் நேற்று ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி திருமூர்த்தியைச் சந்தித்து விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

இதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் வொஷிங்டனில் தங்கியிருந்த போது ☞2

## 2022 ஏப்ரலுக்குள் பொருள்களின் விலைப் பிரச்சினைக்குத் தீர்வு!

### இராஜாங்க அமைச்சர் கூறுகின்றார்

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் பொருள்களுக்கான விலைப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர், தற்போதுள்ள பொருள்களின் விலை தொடர்பான பிரச்சினை, கொரோனா நிலைமையின் விளைவாகும் என்றும், இது உலகளாவிய பிரச்சினையாகும் என்றும் குறிப்பிட்டார்.

அரசுக்கு வருவாயைப் பெறுவதற்கான வழிகள் மற்றும் விலை ஏற்ற இறக்கங்களை நிர்வகிப்பதற்கான வழிகளை நிதி அமைச்சர் எடுத்துக்காட்டியுள்ளார் என்று தெரிவித்த இராஜாங்க அமைச்சர், 2022ஆம் ☞2

## வட கிழக்கு ஆயர்களுடன் வேலன் சுவாமி குழு பேச்சு

போரினால் இறந்தோர் நினைவு தொடர்பாக வடக்கு, கிழக்கு ஆயர்களினால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் வேலன் சுவாமி குழுவினர் வடக்குக் கிழக்கு ஆயர்களைச் சந்தித்துப் பேசினர்.

இது தொடர்பில், 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்' எம்ற அமைப்பின் பெயரில் 'போரினால் இறந்தோர் நினைவு தொடர்பான வடக்கு கிழக்கு ஆயர்களுடனான சந்திப்பு' என்ற பெயரில் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:–

மேற்படி விடயம் ☞2

## 45 மாணவ பிக்குகளுக்குக் கொரோனா!

ஆனமடுவ – பிரிவெனாவில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மாணவ பிக்குகளின் எண்ணிக்கை 45 ஆக அதிகரித்துள்ளது எனச் சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஆனமடுவ கொட்டுக்கச்சி வடத்த ஸ்ரீ சரணங்கர பிரிவெனாவில் மேலும் 14 மாணவ பிக்குகளுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என ஆனமடுவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

வடத்த ஸ்ரீ சரணங்கர பிரிவெனாவில் தங்கியிருந்து கல்வி பயிலும் மாணவ பிக்குகளுக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

குறித்த பிரிவெனாவில் இம்மாதம் முதலாம் திகதி 18 மாணவ பிக்குகளுக்குக் கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதுடன், கடந்த 10 ஆம் திகதி மீண்டும் 13 மாணவ பிக்குகளுக்குத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

இவ்வாறு கொரோனாத் தொற்றுக்குள்ளான மாணவ பிக்குகளுக்கு தனித்தனியாக சிகிச்சை அளிக்கப்பட்டு ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைக்கின்றார்.

இது போன்ற ஒரு தினத்தில்தான் – 2005 நவம்பர் 18 இல் – நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், வென்று, அடுத்த நாள் நவம்பர் 19 ஆம் திகதி, முதல் தடவையாக நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்றார் அவர்.

அதேபோல சரியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் – நவம்பர் 17ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ இதே நவம்பர் 18இல்தான் பதவியேற்றார். அதன் இரண்டாம் ஆண்டு நிறைவு நேற்று.

அதை ஒட்டி அநுராதபுரத்தில் பாரிய தாதுகோபுரம் ஒன்றை ராஜபக்ஷ சகோதரர் நேற்றுத் திறந்து வைத்து மகா சங்கத்திடம் கையளித்தனர். இந்த நிகழ்வை ஒட்டி தெற்கில் சிறு சலசலப்பு உண்டு. அதனால் அதை ஒரு தகவலுக்காகப் பகிர்ந்து கொள்கிறேன்.

2009இல் யுத்தத்தில் வென்றமையை அடுத்து இப்படி ஒரு பெரிய ஸ்தூபியை, யுத்த வெற்றிக்கான அர்ப்பணிப் பாக கட்ட வேண்டும் என்று மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப்பீடம் தீர்மானித்தபோது தென்னிலங்கை பௌத்த மத பீடத்துக்குள்ளேயே அதற்கு எதிர்ப்புக் கிளம்பியது.

யுத்த வெற்றிக்காக பௌத்த மதத்துக்கு ஸ்தூபி கட்டுவதா என்பது முதல் ஆட்சேபம்.

அநுராதபுரத்தில் ஏற்கனவே இருக்கும் வரலாற்றுப் புகழ் மிக்க தாதுகோபுர ஸ்தூபிகளுக்கு மேலாக அல்லது நிகராக ஒன்றைக் கட்டுவது பௌத்த மத சின்னத்துக்கு மாசு ஏற்படுத்தும் செயல் என்று இன்னொரு சாரார் மனச் சஞ்சலப்பட்டனர்.

பௌத்த மத மரபுப்படி நாட்டில் தொன்மையான எட்டுதாதுகோபுரங்கள் உள்ளன. அவையே நாட்டுக்கு அருளாசி வழங்கி நிற்கின்றன. அவற்றின் எண்ணிக்கையை ஒரு தலைப்பட்சமாக , தம்மிஷ்டப்படி அதிகரிப்பது மத நம்பிக்கையுடன் முரண்டு பிடிக்கும் முயற்சி என்றும் ஆட்சேபிக்கப்பட்டது.

ஆனால், வழமை போல இந்த ஆட்சேபனைகளை எல்லாம் ராஜபக்ஷக்கள் புறமொதுக்கி விட்டு 2010 இல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் 'சந்தஹிரு சே ரந்துன்' வேலைகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இலங்கையில் மிகப் பெரிய ஸ்தூபி ஸ்தாபிக்கப்பட்டு சரியாக இரண்டாயிரம் வருடங்கள் கழித்து இந்தப் புதிய திட்டம் தொடங்கப்பட்டது என்று அப்போது கூறப்பட்டது.

85 மீற்றர் உயரம், 244 மீற்றர் சுற்றளவு கொண்டதாக ஸ்தூபி எழுந்தது.

எனினும் ஆரம்ப எதிர்ப்புக் காரணமாக இந்த அமைப்பு வேலைகள் எதிர்பார்த்த வேகத்தில் நடக்கவில்லை.

இடைவழியில் 2015 முற்பகுதியில் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி கவிழ்ந்தது.

இந்த ஸ்தூபியை அமைக்க முற்பட்டதே அவரது ஆட்சியின் வீழ்ச்சிக்குக் காரணம் என்றும், அது அபசகுனம் என்றும் கூட அப்போது பலமாகக் கூறப்பட்டது.

இந்த அவப்பெயர் காரணமாக பின்னர் ஆட்சிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன அந்தப் பக்கமே திரும்பிப் பார்க்கவில்லை. தலைகாட்டவில்லை. இந்தத் தூபியை அமைத்தால் ஆட்சித் தலைவருக்குக் கூடாதாம் என்று அப்போது நியாயம் கற்பிக்கப்பட்டது.

ஆனால், மீண்டும் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிப் பீடம் ஏறியதும், அவரது மேற்பார்வையில் இந்த விடயம் முடுக்கி விடப்பட்டது.

படையினரின் யுத்த வெற்றிக்கான அர்ப்பணமாக இது கற்பிக்கப்படுவதால், கோட்டாபய ராஜபக்ஷ தமது பாதுகாப்புச் செயலாளரான ஜெனரல் கமல் குணரட்ண மூலமே இந்தப் பணிகளைத் துரிதப்படுத்த, தாது கோபுரம், அவரது பதவியேற்பின் இரண்டாம் ஆண்டு நிறைவில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஆனாலும், அவரது ஆட்சிக்கும், நிர்வாகத்துக்கும் எதிராக மக்கள் உணர்வெழுச்சி கிளர்ந்து வருகையில் – பிரதமரின் உடல் நலன் குறித்து அவ்வப்போது இசகுபிசகான செய்திகள் பரவி அல்லது பரப்பப்பட்டு, வருகையில் – இவ்வளவு அவசரப்பட்டு இதனை அவர் திறந்து வைக்கும் நடவடிக்கையை எடுத்தமை தென்னிலங்கையில் ஆரோக்கியமான சகுனமாகப் பார்க்கப்படவில்லை என்பது தான் நிலைமை.

இதையொட்டிய விடயங்களை அப்பட்டமாகவும், வெளிப்படையாகவும் எழுதுவதும் கூட சிக்கல் தரக் கூடியதுதான். வேண்டாம் வினை. இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். – மின்னல் –

## 45 மாணவ பிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வந்த நிலையில், மீண்டு மூன்றாவது தடவையாக நேற்று அங்கு கல்வி பயிலும் மாணவ பிக்குகளுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 14 மாணவ பிக்குகளுக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என ஆனமடுவ சுகாதார வைத்திய அதிகாரி ரவி அபேரத்ன தெரிவித்துள்ளார்.

சுமார் 65 மாணவ பிக்குகள் தங்கியிருந்து கல்வி பயிலும் வடத்த ஸ்ரீ சரணங்கர பிரிவெனாவில் 10 சிறுவர்களும் இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## 2022 ஏப்ரலுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும் என்றும் மேலும் கூறினார்.

## உள்ளூராட்சி சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் சகல உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுள் காலமும் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன் நிறைவு பெறவுள்ளது.

இருந்தபோதும் உடனடியாக தேர்தல் ஒன்றிற்கு செல்லும் நிலையில் அரசு இல்லாத காரணத்தினால் இருக்கும் சபைகளின் பதவிக் காலத்தை மேலும் ஓர் ஆண்டிற்கு நீடிக்கும் முடிவிற்கு அரசு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணத்தினால் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களிற்கு ஓராண்டிற்கான கொடுப்பனவிற்கு தேவையான 40 கோடி ரூபா 2022ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்டத்திலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம் எதிர் காலத்தில் கிராமங்களில் அரசிற்கான ஆதரவைத் திரட்டும் நோக்கில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஊடான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென தலா 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அமைச்சுக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிதி அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, திறன்மேம்பாட்டுத் தொழிற்கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சு, வெகுஜன ஊடக அமைச்சின் நிறுவன மற்றும் சட்டக் கட்டமைப்பு ஆகியவற்றிலும் இவ்வாறு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## நேற்று 737 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதிக்கப்பட்ட மேலும் 372 பேர் இன்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 25 ஆயிரத்து 560 ஆக அதிகரித்துள்ளது.

## இந்தியப் பிரதிநிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் தரஞ்சித் சிங் சந்துவை சுமந்திரன் சந்தித்தமை தெரிந்ததே.

நேற்றும் இன்றும் நியூயோர்க்கில் ஐ.நா. பிரதிநிதிகளைச் சந்திக்கும் சுமந்திரன் குழுவினர் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் சாணக்கியன் எம்.பியுடன் இணைந்து கனடாவில் தமிழ் மக்களை பல பொது நிகழ்வுகளில் சந்திக்கின்றனர்.

பின்னர் அடுத்த நாள் திங்கட்கிழமை வொஷிங்டன் திரும்பி அமெரிக்க இராஜாங்க அமைச்சின் முக்கிய பிரதிநிதிகளை அவர்கள் சந்தித்துப் பேச்சு நடத்துகின்றனர்.

அதன் பின்னர் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஒட்டாவா கனேடிய வெளிவிவகார அமைச்சுப் பிரதிநிதிகளையும் –

அதையடுத்து 25ஆம் திகதி வியாழக்கிழமை லண்டனில் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சுப் பிரதிநிதிகளையும் –

சுமந்திரன் – சாணக்கியன் எம்.பிக்கள் குழு சந்தித்துப் பேச்சு நடத்தவிருக்கின்றது.

# பிரித்தானிய தூதருடன் ரெலோவினர் சந்திப்பு

## அதை கூட்டமைப்புச் சந்திப்பு என்கிறது ரெலோ



இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஸாரா ஹல்டன் அம்மையாருடன் நேற்று வியாழக்கிழமை ரெலோவின் பிரமுகர்கள் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டனர்.

வழமைபோல அந்தச் சந்திப்பு தொடர்பில் செய்தியை வெளியிட்ட ரெலோ செய்தித் தொடர்பாளர், அது கூட்டமைப்புடனான சந்திப்பு என்று எழுத்தில் செய்தியாக அறிவித்தார்.

அது மாத்திரமல்ல, அந்தச் செய்தியின் முடிவில் தமது பதவி நிலையை, 'ரெலோ ஊடகப் பேச்சாளர் – தமிழ்தேசியக் கூட்டமைப்பு' – என்று குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அது ரெலோ கட்சிப் பிர முகர்களுடனான சந்திப்புத்தான் என கொழும்பில் பிரித்தானியத் தூதரக வட்டாரங்கள் காலைக்கதிருக்கு உறுதிப்படுத்தின.

'பிரித்தானிய உயர் ஸ்தானிகருடன் கூட்டமைப்பினர் சந்திப்பு' – என்ற தலைப்பில் ரெலோ செய்தித் தொடர்பாளர் விடுத்த செய்திக் குறிப்பின் முழு விவரம் வருமாறு:–

இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஸாரா ஹல்டன் அம்மையார் உடனான சந்திப்பு ஒன்றை கூட்டமைப்பினர் மேற்கொண்டிருந்தனர். 18 நவம்பர் 2021 வியாழக்கிழமை காலை எட்டரை மணிக்கு கொழும்பில் அமைந்த உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் மற்றும் சட்டத்தரணி தயாபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்

வடக்கு கிழக்கு பகுதிகளில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் ஐ.நா. பிரேரணை சம்பந்தமாகவும் முக்கியமாக கலந்துரையாடப்பட்டது.

பிரித்தானியாவின் தலைமையிலே ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் கொண்டுவரப்பட்ட 46/1 பிரேரணையின் முக்கியத்துவம், அதில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள், அவற்றில் காணப்படுகின்ற முன்னேற்றங்கள், அதன் அடிப்படையில் செயற்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் என்பனவற்றில் கவனம் செலுத்தப்பட்டது. கால வரையறையோடு கொண்டுவரப்பட்ட இந்தப் பிரேரணையில் பிரேரிக்கப்பட்ட விடயங்களை நிறைவேற்ற 18 மாதங்களே உள்ளன. அதில் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய விடயங்கள் ஒருபுறம் இருக்க, தமிழ் தரப்பினரால் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்களிலும் அக்கறை செலுத்துவது பற்றி கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டன.

இதன் பிரகாரம் தமிழ் மக்கள் முகம் கொடுத்திருக்கும் முக்கிய பிரச்சினையான காணி அபகரிப்பு, இனக் குடிப்பரம்பல் சிதைப்பு என்பவற்றை தற்காலிகமாக தடுத்து நிறுத்தும் முயற்சியாக ஐ.நா. பிரேரணையில் பரிந்துரைக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக நிறைவேற்றுவது,

10

## வட கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பாக அண்மையில் வடக்கு கிழக்கு ஆயர்கள் பேரவையினால் வெளியிடப்பட்ட 'போரினால் இறந்தோர் நினைவு' எனும் தலைப்பிலான அறிக்கை பல தரப்பினருக்கு அதிருப்தியையும், கவலையையும் தமிழ்த் தேசியத்தின்பால் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு, கிழக்கு சிவில் சமூகங்களாக இவ்விடயம் தொடர்பாக நடைபெற்ற பல்வேறுபட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில், சிவகுரு ஆதீன முதல்வரும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைப்பாளருமான தவத்திரு வேலன் சுவாமிகள் அவர்களும், கிழக்கு மாகாண சிவில்சமூக செயற்பாட்டாளர்களின் இணைப்பாளரும், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைப்பாளருமான திரு.ச.சிவயோகநாதன் அவர்களும், மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்களையும், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய நோயல் இமானுவேல் ஆண்டகை அவர்களையும், யாழ் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களையும், மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களையும் சந்தித்து, மேற்படி விடயம் தொடர்பாக கலந்துரையாடினர். இக்கலந்துரையாடலில் மாவீரர் பெற்றோர்களினதும், தமிழ் தேசியத்தின் பால் பற்றுறுதி கொண்ட பல்வேறு தரப்பினரதும் ஆதங்கங்கள், கவலைகள் மற்றும் கருத்துக்கள் என்பன ஆயர்களிடம் எடுத்துரைக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலின்போது, ஆயர்கள் பேரவையால் அறிவிக்கப்பட்டிருந்த போரினால் இறந்தோர் நினைவு கூரலை குறிப்பிட்டிருந்த 20.11.2021 அழைப்பை மீளப்பெற்றுக்கொள்ளுமாறு வடக்கு கிழக்கு சிவில் சமூகங்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. – என்று தெரிவிக்கப்பட்டது.

## நீதிமன்றத் தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியா பொலிஸார் வீடு வீடாகச் சென்று வருகின்றார்கள்.

வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவுக்குள் 20.11.2021 தொடக்கம் 29.11.2021 வரை மாவீரர் நாளை நினைவுகூருவதற்கு வவுனியா தலைமையகப் பொலிஸாரால் வவுனியா நீதிமன்றத்தில் தடை உத்தரவு கோரிய மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதனை ஆராய்ந்த மன்று குறித்த நிகழ்வு தடை உத்தரவு பிறப்பித்துள்ளதுடன், பொலிஸாரால் பெயர் குறிப்பிடப்பட்ட 8 பேருக்கும் தடை உத்தரவுக் கட்டளையை வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் முன்னாள் அரசியல் கைதியான செல்வநாயகம் அரவிந்தன், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி கா.ஜெயவனிதா, காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் ப.சத்தியலிங்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உப தலைவர் சி.கஜேந்திரகுமார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் முக்கிய செயற்பாட்டாளர் சு.தவபாலன் ஆகியோருக்கு குறித்த தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதில் பெயர் குறிப்பிட்ட சிலரது முகவரிகள் தவறாகப் பொலிஸாரால் வழங்கப்பட்டுள்ளமையால் குறித்த நபர்களைத் தேடி வவுனியா பொலிஸார் வீடு வீடாகத் திரிந்து வருகின்றனர். பின்னர் தொலைபேசி அழைப்பெடுத்து அவர்கள் நிற்கும் இடங்களுக்குச் சென்று குறித்த தடை உத்தரவுகளை வழங்கி வருகின்றனர்.

இதேவேளை, குறித்த தடை உத்தரவில் தமது பெயர்கள் இருக்கின்றபோதும் முகவரிகள் பிழையாக உள்ளன எனவும், பொலிஸாரால் வழங்கப்பட்ட கட்டளையில் தமிழ் எழுத்துப் பிழைகள் அதிகமாக உள்ளன எனவும் தடை உத்தரவைப் பெற்றவர்கள் தெரிவித்துள்ளனர். (100)

# தேசிய உற்பத்திகளை இலக்காகக் கொண்டே புதிய வரவு - செலவுத் திட்டம் அமைந்துள்ளது

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெருமிதம்

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தத்துக்குப் முன்னர் விவசாயம் மேற்கொள்ளப்பட்ட அனைத்து காணிகளிலும் வேளாண்மைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் யுத்தம் காரணமாக புலம்பெயர்ந்து இந்தியாவில் தங்கியிருப்போர் விரும்புகின்றபோது நாட்டிற்கு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய உற்பத்தியை இலக்காகக் கொண்ட பிரதேச அபிவிருத்தியினை முதன்மைப்படுத்தும் வகை யில் புதிய வரவு-செலவுத் திட்டம் அமைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், கடற்றொழில்சார் அபிவிருத்திக்காக 300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டிய கடற்றொழில் அமைச்சர், வடக்கு மாகாணத்துக்கான நிலைபேறான கடற்றொழில் அபிவிருத்தியையும் நீர் வேளாண்மை தொடர்பில் மிக அதிகளவிலான செயற்றிட்டங்கள் நாடளாவிய ரீதியிலும் மேற்கொள்ளப்ப டும் எனவும் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

300 கோடி ரூபா கடற்றொழிலுக்கென வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த வருடத்தில் இரண்டு லட்சம் ஹெக்டேயர் நீர் நிலைகளில் நன்னீர் வேளாண்மைக்கான வசதிகளை மேற்கொள்வதற்கும், அதனடிப்படையில் 19.6 கோடி மீனின் குஞ்சுகள் வைப்பிலிடப்பட்டு, அதன்மூலம் சுமார் 1800 கோடி பெறுமதியான 125 ஆயிரம் மெற் றிக்தொன் அறுவடையை பெற்றுக்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்துக்கான நிலைபேறான கடற்றொழில் அபிவிருத்தித் திட்டம், கடற்றொழில் துறைமுக அபிவிருத்திகள், நீர்வள ஊக்கம் (தியவர திரிய) கடன் திட்டத்துக்கான நிதிப் பங்களிப்பு, பலநாட் கலங்களுக்கான வழித்தட கண்காணிப்புக் கருவிகள், கடற்றொழில் மற்றும் நன்னீர் வேளாண்மைகளில் ஈடுபடுகின்ற மக்களின் வாழ்வியலை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், மேலதிகமாக 100 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளதால், அடுத்த வருடத்தில் நீர்வேளாண்மை தொடர்பில் மிக அதிகளவிலான செயற்றிட்டங்களை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

காணி அமைச்சுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி மானியத்தில், இயற்கை அனர்த்தங்கள் காரணமாக காணி இழப்புகள் ஏற்படுகின்றவர்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்குவதென்பது நல்லதொரு திட்டமாக அமைகின்றது.

காணிப் பிணக்குகள் தொடர்பான பிரச்சினைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே அதிகமாகக் காணப்படுகின்றன. அவற்றை விரைந்து தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எமது பகுதிகளிலே நீண்டகால இடப்பெயர்வுகள் காரணமாகப் பயன்பாட்டு நிலங்கள் மற்றும் குடியிருப்பு காணிகள் என்பன காடுமண்டிக் காணப்படுகின்றன. அத்தகைய நிலங்கள் வனத் திணைக்களம் அல்லது வனஜீவராசிகள் திணைக்களங்களின் ஆளுகைக்கு உட்பட்ட நிலங்களாக கணிக்கப்பெற்று வருகின்றன. அந்த நிலங்களில் எமது மக்கள் யுத்தத்துக்கு முற்பட்ட காலங்களில் பல்வேறு பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

எனவே, அவ்வாறு இனங்காணப்படுகின்ற நிலங்களில், சூழல் மற்றும் வன ஜீவராசிகளுக்குப் பாதிப்புகள் ஏற்படாத வகையில் மண் வேளாண்மை மற்றும் நீர் வேளாண்மை செய்கைகளில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாணத்துக்கான அண்மைய விஜயத்தின்போது, பல்வேறு கடற்கரையோரப் பகுதிகள் கடலரிப்புக்கு உட்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அப்பகுதிகளில் மட்டுமல்லாது நாட்டின் பல்வேறு பகுதிகளையும் கடலரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இதுவரையில் மீளக்குடியேறாமல் இருந்து வருகின்ற குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்கென 125.9 கோடி ரூபாவும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் மேலும் 1,200 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கும், யாழ்.நகர சபைக் கட்டட நிர்மாணிப்பிற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தியாவில் இருந்து நாட்டுக்குத் திரும்ப விரும்புகின்றவர்களுக்கும் மீள்குடியேற்றத்துக்கான வசதிகளை வழங்க முடியும். நாட்டுக்கு வரவிரும்புகின்றவர்களை அழைத்து வருவதற்கான ஒழுங்கு முறைகள் தொடர்பாக இந்திய இராஜதந்திரத் தரப்புக்களுடன் கலந்துரையாடி வருகின்றேன்.

கைத்தொழிற்துறையை பொறுத்தமட்டில், திருகோணமலை கைத்தொழிற்பேட்டை உள்ளடங்கலான மேம்பாடுகள் மற்றும் ஏறாவூர் விசேட புடைவை உற்பத்தி வலய உருவாக்கம் எமது பகுதிகளுக்கு முக்கியத்துவங்களாக அமைகின்றன. ஏறாவூர் புடைவை உற்பத்தி வலயம் என்பது நீண்டகால எதிர்ப்பார்ப்புகளில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.



மின்சாரத்துறை தொடர்பில் பார்க்கின்றபோது, மன்னார், முசலி, கிளிநொச்சி, பூநகரி போன்ற பகுதிகளில் கலப்பு, புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்கள் அமைக் கப்படுவதற்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

துறைமுகங்களைப் பொறுத்தவரையில், காங்கேசன்துறை இறங்குதுறை பணிகளுக்கென 79.7 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் துறைமுகம் அபிவிருத்தியடையும் நிலையில் இந்தியாவில் இருந்து நேரடியாகவே எமது பகுதிக்கு அத்தியாவசியப் பொருள்கள் அடங்கலாக ஏனைய தேவைகளுக்கேற்ற பொருள்களையும் கொண்டு வருவதன் மூலம் குறைந்த விலையில் இலகுவாக அவற்றைக் கொள்வனவு செய்யக்கூடிய வாய்ப்பு எமது மக்களுக்கு ஏற்படும். - என்று தெரிவித்தார்.

அதேபோன்று சமுர்த்தி பயனாளிகள் பட்டியலை மீளாய்வுக்கு உட்படுத்துவது, காணாமற்போனோர் விவகாரத்துக்குப் பரிகாரம் காண்பதற்கான ஒரு மனிதாபிமான செயலாக 30 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளமை, ஆசிரியர் மற்றும் அதிபர்களின் கோரிக்கைகளுக்கான தீர்வு, குடிதண்ணீர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகள், இரசாயனப் பசளைகளுக்குப் பதிலாக சேதனப் பசளைகளைப் பயன்படுத்தும் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு போன்ற பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வரவு - செலவுத் திட்டம் படிப்படியாக வெளிநாட்டு இறக்குமதி மோகத்திலிருந்து விடுபட்டு, தேசிய உற்பத்தியின்பால் மக்கள் நாட்டம் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. - என்றார்.

# மின்னல் தாக்கி உயிரிழந்த மாணவனின் குடும்பத்துக்கு மோகனதாஸ் சுவாமி உதவி

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்துக்குட்பட்ட ஐயங்கன்குளம் கிராமத்தில் மின்னல் தாக்கி உயிரிழந்த மாணவனின் குடும்பத்தினருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகனதாஸ் சுவாமிகள் எதிர்பாராதவிதமாக சென்று ஒரு தொகை நிதி உதவியை குடும்பத்தினரிடம் வழங்கி வைத்தார்.

கடந்த 26 ஆம் திகதி தனது வீட்டுக்கு அருகில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த 14 வயது சிறுவன் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தான்.

குறித்த சிறுவனின் தாயாரும் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் நோய் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் துணுக்காய் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்களைக் கையளிக்கும் நிகழ்வுக்குச் சென்ற மோகன் சுவாமிகள் மின்னல் தாக்கி உயிரிழந்த மாணவனின் குடும்ப நிலை தொடர்பில் அறிந்துள்ளார். இதையடுத்து உடனடியாகவே யாரும் எதிர்பாராத விதமாக உயிரிழந்த மாணவனின் வீட்டுக்கு நேரடியாகச் சென்று ஆறுதல் கூறியதோடு குறிப்பிட்ட தொகை பணத்தையும் வழங்கியுள்ளார். மோகனதாஸ் சுவாமிகளின் எதிர்பாராத செயற்பாடு அங்குள்ளவர்களின் மனதை நெகிழச் செய்தது.

# எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு விலை சிங்கப்பூரிலும் அதிகரித்துள்ளது

## விமல் சமாதானம்



சிங்கப்பூரிலும் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுவின் விலை 18 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

1977 ஆம் ஆண்டு முதல் கடனில் தங்கியிருந்த செயற்திட்டங்களுக்கு முதலீடு செய்த அனைவரும் தற்போதைய பொருளாதார சரிவிற்குப் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

மேலும் சிங்கப்பூரிலும் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுவின் விலை 18 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், அந்நாட்டில் பல பொருள்களின் விலை மட்டமும் உயர்ந்துள்ளதாகத் தெரிவித்தார். எனவே, இது இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட ஒன்றல்ல என்றும் அமைச்சர் விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்தார்.

# ஆயிரம் போதை மாத்திரைகளுடன் வாழைச்சேனையில் ஒருவர் கைது

## பொலிஸார் விசாரணை

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் ஆயிரம் போதை மாத்திரைகளுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டப்ள்யூ.எம். சந்திரகுமார தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை, கோழிக்கடை வீதியில் வைத்து 38 வயதுடைய கண்ணகிபுரத்தைச் சேர்ந்த நபரொருவர் ஆயிரம் போதை மாத்திரைகளுடன் கடந்த செவ்வாய்க் கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மிக நீண்ட நாள்களாக வாழைச்சேனைப் பகுதியில் சூட்சுமமான முறையில் தச்சுத் தொழிலாளி போன்று காட்டிக் கொண்டு போதை மாத்திரைகளை விநியோகித்து வந்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய வாழைச்சேனை பொலிஸ் நிலைய விசேட பிரிவினரோடு இணைந்து மேற்கொண்ட மிக நீண்ட நேரப் பிரயத்தனத்துக்கு பின்னர் அவர் கைது செய்யப்பட்டார் என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.எம். சந்திரகுமார தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவர் போதை மாத்திரைகளைக் கொண்டு வருவதற்குப் பயன்படுத்திய சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டப்ள்யூ.எம். சந்திரகுமார மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சந்தி சிரிக்கும் முஸ்லிம் அரசியல்

முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களைப் பார்க்கும் போது ஒருபுறம் பரிதாபமாகவும் மறுபுறம் விசனமளிப்பதாகவும் இருக்கின்றது.

வரவு – செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பின் போது நடந்து கொள்ள வேண்டிய விதம் குறித்துத் தீர்க்கமான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் உயர்மட்டங்கள் தனித்தனியாகக் கூடவுள்ளன என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இந்தச் செய்தி பல தரப்பினராலும் ஏளனத்துடன் பார்க்கப்படும் விவகாரமாக உள்ளது.

அரசமைப்பின் இருபதாவது திருத்தம் நாடாளுமன்றுக்குக் கொண்டு வரப்பட்டபோது முஸ்லிம் எம்.பிக்கள் விலை போனமையைக் கண்டு முஸ்லிம் சமூகமே அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தது.

அந்த எம்.பிக்களை இன்னும் கொள்கை, சித்தாந்தம், தமது மக்களின் அபிலாஷைகள் என்ற நியாயங்களின் மூலம் கட்டி வைத்திருக்க முடியும் என முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் நம்புகின்றமை – அல்லது நம்புகின்றமை போல வெளியில் காட்டுகின்றமை – வேடிக்கையிலும் வேடிக்கையாகும்.

முஸ்லிம்களை வர்த்தக சமூகம் என்பார்கள். உலகளாவிய ரீதியில் அவர்கள் அப்படித்தான் இருக்கின்றார்கள். ஆனால் அதை எல்லாம் தாண்டி, உலகெங்கும் உள்ள முஸ்லிம்கள் தங்களின் மார்க்கத்தின் மீதும் – மதத்தின் மீதும் – உயிருக்கு நிகரான உறுதியைக் கொண்டிருக்கின்றார்கள். மார்க்கமா, வர்த்தகமா என்று வந்தால் அவர் கண் வருமானத்தை – வர்த்தகத்தை – தூக்கி எறியப் பின் நிற்காத மதத் தீவிரப் போக்காளர்களாகவே அவர்கள் உலகெங்கும் அடையாளம் காணப்படுகின்றனர்.

ஆனால், இங்கு நிலைமை அப்படியல்ல. முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளாக வெளிப்பட்ட பலரும் அரசியலை இன நலனுக்காகப் பார்ப்பதை விடுத்து, தத்தமது வர்த்தக நலனுக்காகவே நோக்குகின்றார்கள். அந்த நலனை இன நலனாகக் காட்ட முயலுகின்றார்கள்.

ராஜபக்ஷக்கள் தமது முன்னைய ஆட்சியிலும், இப்போதும், முஸ்லிம்கள் உட்பட்ட சிறுபான்மையினர் விடயத்தில் எப்படி பௌத்த, சிங்களப் பேரினவாதத் திமிர் போக்கில் – மேலாண்மை வெறியில் – நடந்து கொள்கின்றார்கள் என்பது வெளிப்படையானது.

கடந்த பொதுத் தேர்தலில் கூட ராஜபக்ஷ அதிகார மையத்தின் அந்தச் சிறுபான்மை எதிர்ப்புத் திமிர்த்தனத்தைத் தமது மக்கள் முன் அம்பலப்படுத்திக் காட்டி, அதற்கு எதிரான ஜனநாயகப் போராளிகளாக தங்களை முன் நிறுத்தி, அதன் மூலமே தமது மக்களின் வாக்குகளைச் சூறையாடி அந்த முஸ்லிம் எம்.பிக்கள் பலரும் பதவிக்கு வந்திருந்தார்கள்.

பதவிக்கு – எம்.பி. ஆசனத்துக்கு – வந்ததும் அவர்கள் செய்த முதல் காரியம் என்ன? சிறுபான்மை இனத்தவருக்கு எதிராக மோசமான பௌத்த, சிங்களப் பேரினவாத அடக்குமுறையை ஏவிவிடும் ராஜபக்ஷக்களின் அதிகாரக் கரத்தை மேலும் பலப்படுத்துவதற்கான இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தமைதான். அதுவும் கட்சியின் – தலைமையின் – முடிவுக்கு மாறாக, அந்த இன ஈனத்தனத்தை அவர்கள் வெட்கம், மானம், ரோஷம் ஏதுமின்றி முன்னெடுத்தார்கள்.

அது, வெறும் லாப, நட்டக் கணக்குப் பார்க்கும் வர்த்தக அரசியல்தான்.

அதைக் கட்டுப்படுத்தி, தத்தமது கட்சிகளை ஒழுங்குபடுத்த முடியாத இயலாமையில் – முடக்கத்தில் – இரண்டு கட்சிகளின் தலைவர்களும் – ரவூப் ஹக்கீமும், ரிஷாத் பதியுதீனும் – வாளாவிருந்தனர். அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அவர்கள் இப்போது வரவு – செலவுத்திட்டத்தின் போது, தங்களது எம்.பிக்களை ஒழுங்குபடுத்தப் போகின்றார்களாம்...! யார் காதில் பூச்சுற்றுகின்றார்கள்...? பழைய பல்லவியை மானங்கெட்ட மக்கள் பிரதிநிதிகள் மீண்டும் அரங்கேற்றுவார்கள். ஹக்கீமும், ரிஷாத்தும் விடயங்கள் தங்களை மீறி நடந்தவையாகத் திரும்பவும் நாடகம் போட வேண்டியதுதான்!

# மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை வளர்ச்சிக்கான வருடாந்த சைக்கிள் ஓட்டப் பவனி





மானிப்பாய் வைத்தியசாலை நண்பர்கள் என்னும் அமைப்பினால் தொடர்ச்சியாக 04 நாள்கள் சைக்கிள் ஓட்ட நிகழ்வு ஒன்று நடத்தப்படுகின்றது. கடந்த 17ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகி இந்நிகழ்வு எதிர்வரும் 20 திகதி சனிக்கிழமை மானிப்பாயில் நிறைவுபெறும்.

கடந்த 2017ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருடமும் மேற்கொள்ளப்படும் இவ் சைக்கிள் பவனி மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை வளர்ச்சிக்கு பங்களிப்பதோடு மட்டுல்லாது இனங்களிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் உயரிய நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வருடம் தோறும் சுமார் 80இற்கும் மேற்பட்ட சைக்கிள் ஓட்ட வீரர்கள் பங்களிக்கும் இந்நிகழ்வில் இலங்கையில் மட்டுமல்லாது பல்வேறு நாடுகளில் வசிக்கும் மானிப்பாய் நகர் மற்றும் வைத்தியசாலையின் பால் ஈடுபாடு கொண்டவர்கள் என பலரும் தம்மாலான பங்களிப்பினை மேற்கொண்டு வருகின்றனர். இந்த அமைப்பினால் இதுவரை காலமும் வைத்தியசாலை யில் பல்வேறு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக குழந்தை நல விடுதி, தாதிகள் தங்குமிடம் என்பன அமைக்கப்பட்டுள்ளமையுடன் வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டியும் வழங்கியுள்ளனர். புற்றுநோய் நோயாளர்களை பராமரிக்கக் கூடிய வசதிகளை ஏற்படுத்தும் நோக்கோடு இம்முறை இந்த சைக்கிள் ஓட்ட நிகழ்வு இடம்பெறுகின்றது.

கொரோனா பேரிடர் காரணமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ள அளவிலேயே இம்முறை வீரர்கள் பங்குகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலதிக தகவல்கள் மற்றும் முன்னைய செயற்திட்டங்கள் தொடர்பாக அறிந்துகொள்ள www.ride4ceylon.com எனும் இணையத்தை பார்வையிடலாம்.

# நந்தியை தவறாக பயன்படுத்தி இந்துக்களின் உணர்வை புண்படுத்திய ஐக்கிய மக்கள் சக்தி

## கீதநாத் காசிலிங்கம் சாடல்

அரசாங்கத்தை விமர்சிக்க வேண்டும் என்பதற்காக நாடாளுமன்றத்தில் 'நந்தி'யை தவறாக பயன்படுத்தி இந்து சமூகத்தின் உணர்வுகளை புண்படுத்தியமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி மன்னிப்பை கோர வேண்டும் என பிரதமரின் ஒருங்கிணைப்பு செயலாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார். தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவொன்றில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

# உலகின் செல்வாக்கு மிக்க ஆய்வாளர்கள் வரிசையில் இடம்பிடித்த இலங்கைப் பெண்

உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க ஆய்வாளர்கள் வரிசையில் இலங்கை ஆய்வாளர் ஒருவரின் பெயரும் இடம்பெற்றுள்ளது.

உலகின் மிகப்பெரிய விஞ்ஞான ஆய்வு தகவல்களை திரட்டும் நிறுவனமான கிளாரிவ் ஆய்வாளர் நிறுவனம் ஆண்டுதோறும் வெளியிடும் பட்டியலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மெத்திக்கா விதானகே இந்தப் பட்டியலில் இணைந்து கொண்டுள்ளார். இந்தப் பட்டியலில் முதல் தடவையாக இலங்கையர் ஒருவர் இடம்பிடித்துள்ளார். மிகவும் அரிதாகவே இந்த வரிசையில் இடம் கிடைக்கப் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த பத்து ஆண்டுகளில் இணையத்தளங்களில் வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கைகள் மற்றும் அவற்றின் பெறுமதி என்பனவற்றை கருத்திற் கொண்டு இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2021



"உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும் செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயல்களின் பிரதிபலிப்பே."

- மகாத்மா காந்தி
(இந்திய தேசபிதா)

# நாவலர் கலாசார மண்டபம் தொடர்பாக மாநகரசபை செயற்பாடுகளால் வேதனை

## யாழ். முதல்வருக்கு சர்வதேச இந்துமதபீடம் கடிதம்



இந்து மக்கள் அனைவர் சார்பாகவும் நாவலர் கலாசார மண்டபம் தொடர்பான கோரிக்கை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் எதிர்வரும் ஆண்டைச் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தும் நோக்கோடு பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்துக்கொண்டிருக்கிறது.

அதன் ஓர் அங்கமாக ஆன்மிகச் சூழலோடு கூடிய தாகச் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கலாசார மண்டபத்தைப் புனரமைப்பதற்கு இந்து சமய, கலாசார அலு வல்கள் திணைக்களம் பல மில்லியன் ரூபாவை ஒதுக் கீடு செய்துள்ள இந்தத் தருணத்தில், யாழ். மாநகர சபையின் நாவலர் கலாசார மண்டபம் தொடர்பான செயற்பாடுகள் மனவேதனை தருவனவாக உள்ளன.

- இவ்வாறு தமது கண்டனத்தைத் தெரிவித்து யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனுக்கு கடிதம் அனுப்பியுள்ளது சர்வதேச இந்துமத பீடம்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இது நாள் வரையும் மாநகர சபை நிர்வாகம் நாவலர் கலாசார மண்டபத்திலே ஆத்மார்த்தமான எந்தவொரு நாவலர் பணியையும் செய்யாத நிலையில், அங்கு நாவலர் சிலையை வைப்பதற்கான ஏற்பாடு செய்வதென்பது உளச் சுத்தியோடு நாவலருக்குப் பணி செய்யும் விடயமாகத் தெரியவில்லை.

நாவலரின் எண்ணங்களுக்கு அங்கு செயல் வடிவம் கொடுக்க விரும்பினால் முதலில் அந்த மண்டபத்தின் அகப்புறச் சூழல் தூய்மையோடு சீராக்கப்பட்டு, ஓர் ஆன்மிகச் சூழல் ஏற்படுத்தப்பட்ட பின், நாவலருக்குச் சிலை வைப்பது என்பது உங்கள் எண்ணத்துக்கு உயர்வு தருவதாக அமையும்.

இந்து மக்கள் அனைவர் சார்பாகவும் சர்வதேச இந்து மத பீடத்தினராகிய நாம் ஏற்கனவே நாவலர் கலாசார மண்டபத்தை அதற்கு உரிய தரப்பினராகிய இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் ஒப்படையுங்கள் என்று உங்களுக்கு விடுத்த வேண்டு கோளையும் நீங்கள் செவிசாய்க்கவில்லை.

நாவலர் செய்த மகத்தான சேவைகளை, சைவத் தமிழ் உலகம் உள்ளவரை என்றும் நினைவு கூரத்தக்க வகையில் அதற்கான செயற்பாடுகளை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுப்பதற்கான ஒரு நிலையைமாக நாவலர் கலாசார மண்டபத்தை மாற்றத் தயவு செய்து வழிவிடுங்கள் அல்லது அவர்களோடு இணைந்து ஆக்கபூர்வமாகச் செயற்படுங்கள்.

நாவலர் பிறந்த மண்ணில் - நாவலருக்கு உரிய பணிகளை - அவருடைய நினைவாக அமைக்கப்பட்ட மண்டபத்திலே நடைமுறைப்படுத்துவதற்கு நம்மவரே தடையாக இருப்பது என்பது, 'நம்மவரே என்னைக் கண்ணீர் சிந்த வைத்தனர்' என்று நாவலரே தன் வாயாற் சொல்லி மனங்கலங்கி வேதனைப்பட்டதை நினைவுகூரச் செய்வதாய் உள்ளது.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு உரியதான நாவலர் கலாசார மண்டபத்திலே நாவலருக்கான பணியைப் போட்டிக்கானதாக ஆக்காமல் ஆத்மார்த்தமான பணியாக முன்னெடுங்கள் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். - என்றுள்ளது.





# பாலம் அமைக்கக் கோரி ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் ரங்கன் குடியிருப்பு மக்கள் கடந்த புதன் கிழமை அப்பகுதி மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரின் ஏற்பாட்டில் 11 மணியளவில் ஆர்ப்பாடம் நடைபெற்றது.

இதில் அப்பகுதி மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இருந்த ஒரே பாதையையும் கடந்த மார்ச் மாதமளவில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்பகுதிக்கு மழை காலம் வருவதற்கு முன்னர் புதியபாலம் அமைத்துதருகிறேன் எனக் கூறி பயன்பாட்டிலிருந்த பாலத்தை முற்றாக அகற்றிவிட்டனர். பாலம் அகற்றப்பட்டு பல மாதகாலம் கடந்த நிலையிலும் பாலம் புனரமைப்பதற்கு எந்தவித மான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதன் காரணமாக இப்பகுதி மக்கள் வைத்தியசாலைக்கு செல்கின்றமை, இப்பகுதிக்கு நோயா ளர் அம்புலன்ஸ் செல்லமுடியாத நிலையிலுள்ளமையுடன் பலமைல் தூரம் நடந்துதான் நோயாளர் அம்புலன்ஸ்க்கு செல்லமுடிகின்றது. இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள் சுத்தமான உடை அனிந்து செல்ல முடியாதநிலையும் உள்ளதுடன் இப்பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வும் இடம்பெறுவதன் காரணமாகவும் எமது பகுதியில் வீதிகள் மிகவும் சேதமடைந்துள்ளன. தற்பொழுது தனியார் ஒருவரது காணியின் ஊடாகவே பயணிக்கவேண்டியுள்ளது. இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

# இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் நாவலர் கலாசார மண்டபத்தை ஒப்படைக்குக!

## யாழ். முதல்வருக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை காட்டத்துடன் கடிதம்

நாவலர் கலாசார மண்டபம் தொடர்பாக உங்களுக்கு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினராகிய நாம் ஏற்கனவே அதனை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளியுங்கள் என்று கோரிக்கை முன் வைத்திருந்தோம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கலாசார மண்டபத்தை முழுமையான ஆன்மிகச் செழுமை மிக்கதோர் இடமாக மாற்றப்படவேண்டும். தாங்கள் அதனைச் செய்யத் தவறுகிறீர்கள். இந்து சமய கலாசாரத் திணைக்களம் ஒருகோடி ரூபா செலவில் அதனைச் செய்வதற்கு முன்வந்துள்ளது. ஆகவே, அவர்களிடம் ஒப்படைப்பதுதான் பொருத்தமானது.

- இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை காட்டத்துடன் ஊடக அறிக்கை அனுப்பியுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மாற்றுக் கருத்துக்கே இடம் இல்லாத வகையில், எந்தவொரு சட்டச் சிக்கலும் இல்லாமல், நூறு சதவீதம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கலாசார மண்டபத்திற்கு உரிமைபூண்ட இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தோடு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினராகிய நாம் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டினை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆண்டாகவும் - இருநூறாவது நாவலர் தினமாகவும் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கலாசார மண்டபத்தை முழுமையான ஆன்மிகச் செழுமை மிக்கதோர் இடமாக மாற்றும் வகையில், ஒரு கோடி ரூபா செலவில் புனர்நிர்மாணச் செயற்பாடுகளை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் மூலமாகச் செயற்படுத்தத் தீர்மானித்திருக்கின்ற நிலையில், நாம் முகநூல் புத்தகங்களூடாக மாநகர சபை நாவலர் கலாசார மண்டபத்தில் முன்னெடுக்கவுள்ள செயற்பாடு பற்றி அறிந்த செய்தி மிகுந்த மன வேதனை அளிக்கிறது.

நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் சிலை நிச்சயமாக வைக்கப்பட வேண்டும். ஆனால் அந்தப் பெருமகனாரின் சிலையை - நாவலர் கலாசார மண்டபத்தை ஓர் ஆன்மிகச் சூழலுக்குரிய இடமாக மாற்றி விட்டு, நீங்கள் இந்த முயற்சியை எடுத்திருந்தால் நிச்சயம் அது மகிழ்ச்சியைத் தந்திருக்கும். இதுவரை காலமும் அதற்கான எந்த முயற்சியும் எடுக்காத மாநகர சபை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கின்ற நாவலர் கலாசார மண்டபம் தொடர்பான செயற்பாடுகளுக்குத் தடை ஏற்படுத்தும் செயற்பாடா கவே நாம் இதனைக் கருதுகிறோம்.




நாவலர் கலாசார மண்டபத்தில் ஆத்மார்த்தமான பணிகள் முன்னெடுக்கப்பட்டால் அதனை முதலில் வரவேற்கும் சபை நம் சபைதான். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தற்போதைய தலைவர் என்ற வகையில், ஒரு விடயத்தை உங்கள் அனைவரோடும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இலங்கைத் திருநாட்டில் யாழ்ப்பாணம் என்றால் கற்றவர்கள் நிறைந்த சமூகம் என்றும் அவர் களின் ஒவ்வொரு செயலும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக அமைந்தன என்றும் எண்ணியது ஒரு காலம். இன்று எமது நிலையை எண்ணி நாம் மிக மிக வேத னைப்பட வேண்டி இருக்கிறது.

இலங்கையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் பற்றிய விடயங்களுக்கு முக்கியத்துவம் தரும் எவரும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையைத் தவிர்த்துப் பார்க்க முடியாது. இலங்கையில் நாவலர் பெருமானுக்குப் பெருமைமிகு நிகழ்வு முன்னெடுத் தமை தொடக்கம் யாழ்ப்பாணத்தில் நாவலர் பிறந்த இடத்தில் நாவலர் கலாசார மண்டபம் அமைக்கும் பணிக்குப் பின்னூக்கியாக இருந்து செயற்பட்டு, நாவலர் பெருமானின் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் அத்தனை செயற்பாடுகளிலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை தன்னை நிலைநிறுத்தி முன்னின்று செயற்பட்டு வருகிறது.

நாவலர் பெருமானின் எண்ணங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்க எண்ணுகின்ற எவரும் உங்கள் செயற்பாட்டில் போட்டி மனப்பாங்கைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். சுய இலாபம் தேடும் எண்ணங்களோடு நாவலருக்கான செயற்பாடுகளை முன்னெடுக்காதீர்கள்.

சைவத் தமிழ் உலகிற்காய் தன் வாழ்வை அர்ப்பணித்த பெருமகனின் எண்ணங்களுக்கு ஆரோக்கியமான செயல் வடிவம் கொடுங்கள். நாவலருக்கான பணியை ஆத்மார்த்தமான செயற்பாடாக முன்னெடுங்கள். முதலில் நாவலர் கலாசார மண்டபத்தை ஆன்மிகச் சூழலுக்கு உரிய இடமாக மாற்றுங்கள்.

நாவலரின் எண்ணங்களை உண்மையோடு நீங்கள் முன்னெடுக்க விரும்பினால், நல்லவர்களின் ஆத்மா நம் செயல்களுக்கு வலிமை தரும். எல்லோரும் இணைந்து செயற்படுங்கள். நல்ல எண்ணத்தை ஒரு தேர் போல ஒன்று சேர்ந்து இழுங்கள். ஒன்றாக முன்னேறுங்கள். சைவத் தமிழரின் நலனுக்கான செயற்பாடாக உங்கள் அனைவரதும் செயற்பாடு அமையட்டும். ஓர் ஆரோக்கியமற்ற சூழலில் நாவலருக்கான சிலை வைத்து விடுவதால் மட்டும் நாவலரின் எண்ணங்கள் ஈடேறிவிடாது. - என்றுள்ளது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் - 196


# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



Royce De Mel

**498. மற்ற வழக்குகள் எப்படியானவை?**

தமிழ் மக்களை நேரடியாகப் பாதித்து, அவர்கள் பரவலாக அறிந்துகொண்ட வழக்கு. அமிர்தலிங்கத்தையும் மற்றக் கூட்டணி பிரதிநிதிகளையும் பாதித்த அவர்களது Trial - at Bar வழக்கு. தமிழ் மக்களின் பாதுகாப்பை ஒட்டியும் சம்பந்தப்பட்டு, சரத்து 29(2) விவாதிக்கப்பட்ட மற்ற வழக்கு. முன்னைய கடற்படைத் தளபதி ரொய்ஸ்.டி.மெல் (Royce De Mel), மற்றையோருக்கு எதிரான வழக்கு. இவர்கள் ஸ்ரீமாவோவின் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்தார்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டு Trial - at Bar முறையில் விசாரிக்கப்பட்டார்கள். தமிழ் மக்களுக்கு எதிராக குடியரசு சட்டங்களின் ஊடாக அவற்றில் இருக்கும் அதிகாரங்களையும் பொருட்படுத்



சிறிமவோ

தாது புதிய சரத்துக்கள் மூலம் மேலும் அந்நியப்படுத்தும் மனபோக்கையை இவற்றில் அன்றே எழுந்த வாதங்கள் நிரூபிக்கின்றன.

அவற்றைப் பார்க்கும் முன், இந்த மனோபாவங்களை முன்னெடுத்த ஒன்றிரண்டு பிற வழக்குகளையும் பார்க்கலாம். ஒரு வழக்கு பதிருதீன், காதர் என்பவர்களால் தொடரப்பட்டது. அது சுதந்திரத்துக்குப் பின் ஆக்கப்பட்ட இலங்கை பிரஜாவுரிமை பற்றிய சட்டங்களின் கீழ் அமைந்தது. அந்த சட்டத்தின் சரத்து, இலங்கையில் பிரஜையாவதற்கு விண்ணப்பிக்கும் ஒருவர், அவரது மனைவி மற்றும் பிள்ளைகளும் அந்த விண்ணப்பத்தில் உள்ளடக்கப்படவேண்டுமானால் அவர்கள் விண்ணப்பத்திற்கு முந்திய 7 வருடங்களில் இலங்கை வதிந்திருக்க வேண்டும் எனக் கூறியது. அதன் அடிப்படையில் பதிருதீனதும் காதரினதும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. அதையொட்டி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி பஸநாயக்கா, மேற்படி விண்ணப்பதாரியின் மனைவி, பிள்ளைகள் விண்ணப்பதாரியுடன் விண்ணப்பம் செய்யும்போது குடியிருந்தால் போதுமானது என்று தீர்ப்பு தர, அரசு அதை எதிர்த்து சரத்து 29(1) கீழ் மேன்முறையீட்டு மன்றத்திற்கு மனு கொடுத்தது. ஆனால் அந்த நீதிமன்றம் நீதிபதி பஸநாயக்காவின் தீர்ப்பை ஆமோதித்தது.

**499. ஆனால் அரசு என்ன செய்தது?**

அதனை சுழியோட, ஏற்படுத்தப்பட்டிருந்த இலங்கை பிரஜாவுரிமை சட்டத்தில் அந்த மாற்றங்களைக் கொண்டு வந்தது. இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம் இலங்கையின் இறைமையில் ஏற்படுத்தப்பட்டதால் இந்த மாற்றங்கள் ஏற்பட்ட பின் சோல்பரி சட்டத்தின் 29 ஆம் சரத்து அதற்கு தாக்கம் ஏற்படுத்தவில்லை என வாதாடியது. பஸநாயக்கா அந்தத் தீர்ப்பை தந்தபோது அது 50,000 விண்ணப்பதாரிகளைப் பாதித்திருந்தது. அதனை ஏற்றிருந்தால் அந்த 50,000 விண்ணப்பதாரிகளும் இலங்கை பிரஜைகளாக ஏற்கப்பட்டிருப்பர். பிரஜாவுரிமையற்ற இந்திய மக்கள் என்றவர்கள்



தொண்டமான்

அந்த ஐம்பதாயிரம் பேருடன் சேர்ந்து பெருகி, சாஸ்திரி – சிறிமாவோ ஒப்பந்தங்கள் வந்து, அதிலும் விடுபட்டு, பின்னர் 1987 இல் வந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினால்தான் மிகுதியிருப்போர் எல்லோரையும் பிரஜாவுரிமைக்கு ஒத்துக்கொள்வதாக ஸ்ரீலங்கா ஏற்றுக் கொண்டது. எதையும் சட்டத்தில் இருந்தாலும் கொடுக்க விரும்பும் மனோபாவத்தையும் அழுத்தத்தின் பேரில் சிலவற்றை ஏற்படுத்துவதும் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் சௌமியமூர்த்தி தொண்டமான் சர்வகட்சி மகாநாடுகளில் இதற்கான தீர்மானங்களை வைத்து, அதற்கு ஏகமானதான ஆதரவுகள் பெற்று, பின் ஒப்பந்தத்தின் சரத்திலும் உள்ளடக்கி, தனது ஆளுமைகளால் எஞ்சியிருந்தோருக்கு பிரஜாவுரிமையும் பெற்றுக் கொடுத்தார்.

இந்திய ஒப்பந்தத்தின் ஒரு முக்கியமான சரத்து இந்திய மண்ணில் அடைக்கலம் புகுந்து அங்கு குடியேறியிருக்கும் தமிழ் அகதிகளையோ, ஏதிலிகளையோ நாட்டிற்குத் திரும்ப அனுப்பி, அவர்களது பழைய இடங்களிலேயே குடியமர்த்தி வாழ்வாதாரம்



திருச்செல்வம்

தருவது என்பது தமிழ் மக்களுடைய அசிரத்தை, அக்கறையீனம் அல்லது அரசியல் போக்குகளால் நடக்கவில்லை. இந்த 33 வருடங்களில் அவர்கள் திரும்ப வருவதற்கான வழிவகைகள் எதுவும் அவர்களாலோ அன்றில் இந்தியாவின் மூலமாகவோ மேற்கொள்ளப்படவில்லை. இங்கு காணிகள் பறிபோகின்றன என ஓலமிடுகிறோம். இளைஞர்கள், பாஸ்போர்ட்டுக்கள் எடுத்து வைத்துக் கொண்டு அதனோடோ அல்லது கடல்வழிகளிலோ பிற தேசம் செல்ல அலைகிறார்கள். இந்த மக்கள் தங்களது காணிகளுக்கும் வரமுடியாமல் அகதி முகாம்களில் அகப்பட்டு வாழ்க்கை நடத்துகின்றார்கள். 13 ஆம் சரத்தின் அமுலாக்கத்தால் இனப்படுகொலையின் அடிப்படைக்காக இயற்றப்பட்ட குடியரசு சட்டங்களின் சரத்துக்களில் ஒரு குச்சியைத்தானும் பிடுங்க முடியாது என்றும் அபிப்பிராயங்கள் சிலர் எழுதுகிறார்கள். பிடுங்க எத்தனிக்க வேண்டாம், முதலில் இந்த மக்களை எமது மண்ணில் நடுவதற்கு வழியைப் பார்ப்போம். அது மாற்றங்களை தரும்.

**500. மற்றைய வழக்குகள் எவை?**

இதனைப்பற்றி குறிப்பிடலாம். இலங்கை தொழிலாளர்கள் காங்கிரஸின் இணை செயலாளராக இருந்தவர் லு.றூ.றீ. நாயர். அவர் இலங்கை பிரஜாவுரிமைக்கு உரித்தானவர். அதன் அடிப்படையில் தேர்தலில் போட்டியிட வேண்டி வாக்காளர் பட்டியலில் பதியப்பட தந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட, இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம் சோல்பரி அரசமைப்பின் 29 ஆம் சரத்துக்கு முரணானது என வாதிட்டார் அப்பொழுது கேகாலை (Kegalla) மாவட்ட நீதிபதி சிவஞானசுந்தரத்தால் அந்த விவாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தேர்தல் ஆணையாளர் முன்னெடுத்த மேன்முறையீட்டை பரிசீலனை செய்த மூன்று நீதிபதிகளின் குழாம் சிவஞான சுந்தரத்தின் தீர்ப்பை ரத்து செய்யவே அதை எதிர்த்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மேன்முறையீடு (Privy Council) செய்தும் அது வெற்றியைத் தரவில்லை. இலங்கையால் நிறைவேற்றப்பட்ட பிரஜாவுரிமை சட்டம் சோல்பரி அமைப்பின் 29 ஆம் சரத்தின் நோக்கத்தை பாதிக்கவில்லை என்று காரணம் சொல்லப்பட்டது. கோடீஸ்வரனின் வழக்கில் சிங்களம் மட்டும் சட்டம் சோல்பரி அமைப்பின் 29 ஆம் சரத்துக்கு எதிரானது என்பது மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் ஆராயப்பட வேண்டும் என Privy Council திருப்பி அனுப்பியிருந்தாலும், அது மேலெடுக்கப்படவில்லை. ஆக நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் மாற்றப்பட்டு, சம்பளப் பாக்கி கொடுக்க சம்மதித்த சிங்கள அரசுகளின் திணைக்களங்களின் முகவர்கள் அதனை நீதிமன்றம் ஆராய்ந்து தீர்ப்பு தராத வழியை பாவித்து அந்த வழக்கு இன்று வரைக்கும் மீள் விசாரணைக்கு வராமலே தேக்கப்பட்டது. ஆனால் அவர்கள் சிங்களம் மட்டும் சட்டத்தை 1972 இல் இயற்றப்பட்ட குடியுரிமை சட்டத்தில் உள்வாங்கி, Privy Council க்கு மேன்முறையீடு செய்ய முடியாது என்ற சரத்தையும் இணைத்து, நாடாளுமன்ற அதிகாரத்தை நிலைநாட்டினர்.


1970 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழரசுக் கட்சி சமஷ்டி அரசே அமைய வேண்டும் என்ற கோரிக்கையில் போட்டியிட்டு அமோக வெற்றியும் பெற்றார்கள்.

அமிர்தலிங்கத்தின் Trial - at Bar வழக்கில் வாதிட்ட திருசெல்வம் கியூ.ஸி. இரண்டு வாதங்களை முன்வைத்தார். முதலாவது சோல்பரி அரசமைப்பின் சரத்து 29(4) அந்த சட்டத்தினை மாற்றுவதனால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் மாற்ற முடியும் என இருந்தது. ஆயின் அதை முற்றாக நிராகரிக்க முடியாது. ஆகவே புதிய கட்டமைப்பு செல்லாது எனச் சமார்ப்பித்தார். அது மக்களின் ஆணையுடன் இயற்றப்பட்டது. ஆகவே அது செல்லுபடியாகும் என பதிலளிக்கப்பட்டது. அதனை மறுதலித்த திருசெல்வம் கியூ.ஸி. அப்படியானாலும் அது மற்ற இனமான தமிழர்களின் ஆணையை பெறவில்லை, அவர்கள் பெரும்பான்மையாக சமஷ்டி அமைப்புக்கே வாக்களித்தனர் என வாதாடினார்.



ஜி.ஜி.பொன்னம்பலம்

இந்த வாதங்களை தவிர்க்க விரும்பிய நீதிபதிகள், Trial - at Bar நடந்து கொண்டிருந்த சமயம் அது அமைக்கப்பட்ட அதிகாரம் தந்த அவசரகால சட்டம் காலாவதியானதால், தாங்கள் வழக்கை மேற்கொண்டு நடத்த தகுதியற்றவர் என மற்ற தமிழ் சட்டத்தரணிகளாக பொன்னம்பலம் போன்றோரின் வாதங்களை ஏற்று தீர்ப்பை தந்தனர். இதனை எதிர்த்து அரசு மேன்முறையீடு செய்ததில் அந்த மன்றின் நீதிபதிகள் Trial - at Bar அமைக்கப்படும் போது அவசரகால சட்டம் அமுலில் இருந்ததால் அது அமைக்கப்பட்டது சட்டரீதியானது எனவும்,



அமிர்தலிங்கம்

வழக்கை மேலும் தொடர்ந்து கேட்கப் பணித்தது. நீதிமன்றம் திரும்பக் கூடிய போது வழக்கு மேலதிகமாக விசாரிக்கப்படவில்லை. ஏனெனில சட்டமா அதிபர் அமிர்தலிங்கத்துக்கு எதிரான வழக்குகளை வாபஸ் பெற்றார். அதனால் 1972 ஆம் ஆண்டு குடியரசு சட்டம் முறையானதா என எதுவித அபிப்பிராயமும் நீதிமன்றத்தால் தெரிவிக்கப்படவில்லை.

அமிர்தலிங்கம் Trial - at Bar ஐ சந்தித்து வெற்றி பெற்ற தளபதியாக வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றி, 1976 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி வாகை சூடினார். பிரபாகரனும் அவரது விடுதலைப்புலிகளின் போராளிகளும் தங்களது உயிர்களையும் அர்ப்பணித்து 2009 இல் ஆகுதியானர்கள். இவை தான் தமிழ் மக்களின் அரசியல் வளர்ச்சியாகவும் விசனமாகவும் அமைந்தது. அமிர்தலிங்கத்தின் வழக்கின் முடிவில் தந்தை செல்வா தந்த கருத்து கவனிக்கத்தக்கது. எமக்கு இன்றும ஒரு புத்திமதியாகவும் தீர்க்க தரிசனமாகவும் கூட அது அமையலாம்.

அதை நாளை பார்ப்போம்.

(வளரும்......)

# சுகாதார நடைமுறைகள் குறித்து வவுனியாவில் திடீர் சோதனைகள்

## இருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல்



வவுனியாவில் சுகாதார நடைமுறைகள் தொடர்பாக திடீர் சோதனை நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்தி ருந்தமையுடன், இருவருக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள் ளனர். வவுனியா மாவட்டத்தில் மீண்டும் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

அதன் ஒரு கட்டமாக சுகாதாரப் பிரிவினர், இராணுவத் தினர் மற்றும் பொலிஸார் இணைந்து வவுனியா பழைய பஸ் நிலையம் மற்றும் நகரப் பகுதியில் சுகாதார நடை முறைகள் தொடர்பாக திடீர் கண்காணிப்பு சோதனை நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இதன்போது முகக்கவசம் அணியாது நின்றோர், முகக் கவசத்தை சீராக அணியாது நடமாடியோர், சமூக இடைவெளி பேணாதோர் உள்ளிட்ட நபர்கள் மற்றும் வர்த்தக நிலை யங்களுக்கு கடுமையான எச்சரிக்கையும் வழங்கப்பட்டது.

அத்துடன், முகக்கவசம் அணியாது பழைய பஸ் நிலை யப் பகுதியில் நடமாடிய ஒருவருக்கு எதிராகவும், முகக்கவசம் அணியாது நகரப் பகுதியில் நடமாடிய ஒருவருக்கு எதிராகவும் என இரண்டு பேருக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள தாகவும் சுகாதாரப் பிரிவினர் மேலும் தெரிவித்தனர்.

(100)

# டிசெம்பர் மாதம் வரைக்கும் தேவையான எரிபொருள் கையிருப்புக்கு ஏற்பாடுகள்

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காணப்பட்ட நீண்ட வரிசைகள் நேற்றுடன் நிறைவடைந்தன என இலங்கைபெற்றோலியகூட்டுத்தாபனம்தெரிவித்துள்ளது.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை என் பதை மக்கள் தற்போது உணர்ந்துள்ளனர் என அதன் தலைவர் சுமித் விஜே சிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த சில நாள்களாக அதிகளவான எரிபொருள்கள் விநி யோகம் செய்யப்பட்டுள்ளன. இதனால் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இருப்புக்கள் முடிவடைந்துள்ளன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாளாந்தம் சுமார் 3 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் பெற்றோலை விநியோகம் செய்கின்றது. இருந்த போதிலும் கடந்த திங்கட்கிழமை கூடுதலாக 600 மெற்றிக் தொன் பெற்றோல் விநியோகம் செய்யப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், நாளாந்தம் 5 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் டீசல் விநியோகிக்கப்படுவதாகவும், செவ் வாய்க்கிழமை அதற்கும் மேலதிகமாக டீசல் விநியோ கம் செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள் ளார்.

அத்துடன், கடந்த சில நாள்கள் இரவு 10 மணிக்கு மேலாகவும் எரிபொருள்கள் விற்பனை செய்யப்பட் டுள்ளமையுடன், எரிபொருள் விநியோக பவுஸர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, அடுத்த மாதம் வரைக்கும் தேவையான எரிபொருள்கள் பெறுகைக்காக ஏற்பாடு மேற் கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# திருகோணமலைத் துறைமுகத்தில் நான்கு இந்திய யுத்தக் கப்பல்கள்!



இந்தியாவின் நான்கு யுத்தக் கப்பல்கள் திரு கோணமலை துறைமுகத்தை வந்தடைந்துள் ளன.

இவ்வாறு இலங்கையை வந்தடைந்த இந்தி யாவின் முதல் பயிற்சி படையணியின் 6 இந்தி யக் கப்பல்கள் நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு வந்துள்ளன எனத் தெரிவிக்கப்படு கின்றது.

ஐ.என்.எஸ்.மகர் மற்றும் ஷர்துல் ஆகிய இரண்டு கப்பல்கள் கொழும்பு துறைமுகத்துக்குச் சென்றுள் ளன எனவும் ஐ.என்.எஸ்.சுஜாதா, தரங்கனி, சுதர் ஷினி மற்றும் சி.ஜி.எஸ். விக்ரம் ஆகிய நான்கு கப்பல்கள் திருகோணமலை துறைமுகத்தை வந்த டைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கந்தளாய் - கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஏழு பேர் படுகாயம்





கந்தளாய் - கொழும்பு பிரதான வீதி 87 ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து சேருவில விகாரைக்கு வருகை தந்து மீண்டும் சேருவில பிரதேசத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டி ருந்த வான் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளா னதில் அதில் பயணித்த பௌத்த மதகுரு உட்பட 7 பேர் படுகாயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது படுகாயமடைந்த 7 பேரும் தற் போது கந்தளாய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், விபத்து தொடர்பி லான விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம் என கந்தளாய் தலைமையகப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

# முன்மாதிரியான அறநெறி நூலகம் காரைதீவில் அங்குரார்ப்பண நிகழ்வு





இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத் தின் அறநெறிப் பாடசாலைகளுக்கான மாதிரி நூலகம் அமைக்கும் செயற்றிட்டத்தின் கீழ், காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில், கடந்த செவ்வாய்க்கிழமை முன்மாதிரியான அறநெறி நூலகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத் தின் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட, மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் துணைமேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்த ஜீ மஹராஜ், சுவாமி விபுலானந்தரது உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தார்.

நிகழ்வின் முக்கிய அம்சமான முன்மாதிரி நூலக மாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட 'வித்திய கூடம்' எனும் பெயரிலான முன்மாதிரியான அறநெறி நூலகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்ட நூல்களை அதிதிகள் மற்றும் நிகழ்விற் கலந்துகொண்டோர் பார்வையிட்டனர்.

இந்த நிகழ்விலே, இந்து சமய கலாசார அலுவல் கள் திணைக்களத்தால் பதிப்பிக்கப் பெற்ற 'கோளறுப் பதிகம்' மற்றும் 'விநாயகர் அகவல்' ஆகிய நூல்களை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் அவர்கள் நிகழ்வின் பிரதம அதிதி சுவாமி நீலமாதவானந்த ஜீ மஹராஜ் அவர்களுக்கு வழங்கி வெளியீடு செய்து வைத்தார்.


இந்த நிகழ்விலே அறநெறிப் பாடசாலைகளுக்கான மாதிரி நூலகம் அமைக்கும் செயற்றிட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கு நூல்கள் வழங்கும் செயற்பாடும் இடம்பெற்றது.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத் தின் அனுசரணையோடு இலங்கை வானொலி தென்றல் அலைவரிசையிலே இடம்பெற்றுவரும் அறநெறிச்சாரம் வானொலி நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இனிதே இடம்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# கையேந்தும் நிலையிலேயே தொடர்ந்தும் இருக்காமல் சுயமாக எழுந்துநிற்கக்கூடிய மக்களாக மாறவேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து



சமுர்த்தி திட்டத்தைப் பெறும் மக்கள் கையேந்தும்நிலையிலேயேதொடர்ந்தும் இருக்காமல், அதைப் பயன்படுத்தி பொருளாதார ரீதியில் சுயமாக எழுந்து நிற்கக் கூடிய மக்களாக மாற வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தொடர்பிலான கருத்துக்களை நாடாளுமன்றில் தெரிவித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்–

அத்துடன், இம்முறை பாதீட்டில் 17 லட்சத்து 93 ஆயிரத்து 533 சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களுக்கென 50 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், சமுர்த்தி நிவாரணம் பெறுவதற்கான எதிர்பார்ப்பு பட்டியலில் பெருமளவினர் காத்திருக்கின்றனர் எனவும் தெரியவருகின்றது.

எனவே, தற்போது நடைமுறையில் உள்ள சமுர்த்தி பயனாளிகள் பட்டியலை மீளாய்வுக்கு உட்படுத்துவது நல்லதென நினைக்கின்றேன்.

இதேநேரம் உலகளாவிய அனர்த்தம் காரணமாக வாழ்வாதார ரீதியில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள், ஓட்டோ உரிமையாளர்கள்மற்றும்தனியார்போக்குவரத்து பஸ் உரிமையாளர்கள் போன்றோருக்கான சலுகைகள், நிவாரணங்கள் போன்ற செயற்திட்டங்கள் பெரிதும் வரவேற்கத்தக்க திட்டங்களாகும்.

அதேபோன்று பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு வழங்குவது என்ற விடயமும், பட்டதாரிகளுக்கான நியமன நிரந்தரமாக்கலும் காலத்தின் தேவையாகவுள்ளன. எமது ஜனாதிபதி பதவியேற்றதன் பின்னர் இதுவரையில் 63 ஆயிரம் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசாங்கம். காணாமற்போனோர் தொடர்பில் பரிகாரம் காண்பதற்கான ஒரு மனிதாபிமான செயலாக 30கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் தற்போது பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டாலும்இ இந்தப்பிரச்சினைதொடர்பில்அரசாங்கம் தனது அவதானத்தைச் செலுத்தி இருப்பது வரவேற்கத்தக்கது.

உறவுகள், தோழர்கள், என்னோடு பழகியவர்கள் காணாமற்போனதன் வலியை நான் உளமார உணர்ந்தவன் என்ற வகையில், காணாமற்போன உறவுகளது உணர்வுகளையும் நான் அறிவேன்.

காணாமற் போனோரது உறவுகள் என்னைச் சந்தித்து, என்னிடம் வெளிப்படுத்தியுள்ள எதிர்பார்ப்புக்களை ஜனாதிபதியிடமும் அவர்களிடமும் வெளிப்படுத்தி, நியாயமான கலந்துரையாடலுக்கு முன்வர வேண்டும் என இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் இம்முறை வரவு – செலவுத் திட்டம், தேசிய உற்பத்தியை இலக்காகக் கொண்ட, பிரதேச அபிவிருத்திகளின் பாலான முதன்மைத்துவங்களைக் கொண்ட வரவு – செலவுத் திட்டமாக அமைந்திருக்கின்றது.

அந்த வகையில், படிப்படியாக வெளிநாட்டு இறக்குமதி மோகத்திலிருந்து விடுபட்டு, தேசிய உற்பத்தியின்பால் மக்கள் நாட்டம் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இன்றைய உலக நடத்தைகள் அவ்வாறானதொரு பாடத்தையே ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் உணர்த்தி வருகின்றன. – என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நாட்டில் தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு நல்லாட்சி அரசு மட்டுமே காரணம் அல்ல

## மைத்திரி எடுத்துரைப்பு

நாட்டில்தற்போதுள்ளபிரச்சினைகளுக்கு நல்லாட்சி அரசு மட்டும் காரணம் அல்ல என முன்னாள் ஜனாதிபதியும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில்உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் –

'நாட்டில் தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு நல்லாட்சியே காரணம் என இங்கு உரையாற்றியவர்களில் பலர் சுட்டிக்காட்ட முற்பட்டனர். நல்லாட்சியின் தலைவர் நான் தான். தற்போது இந்த அரசுடன் இருக்கின்றேன். மேற்படி கருத்து தவறானது.

நல்லாட்சி மட்டுமல்ல அதற்கு முன்னர் இருந்த அரசுகளும் காரணம். சுமார் 40 ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை நீடிக்கின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டில் இருந்து பணம் வழங்கி யாழில் பெற்றோல் குண்டுத் தாக்குதல்

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் உள்ள வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதலை மேற்கொள்ளுமாறு தமக்கு 30 ஆயிரம் ரூபா பணம் வெளிநாட்டில் இருந்து வழங்கப்பட்டதாக சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில்கைது செய்யப்பட்டுள்ளவர்கள் தம்மிடம் வாக்குமூலம் அளித்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் உள்ள வீடொன்றின் மீது கடந்த மாதம் 10 ஆம் திகதி பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்துஇ விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சி.சி.ரி.வி. காட்சிகளின் அடிப்படையில் இ உடுவில் மற்றும் சாவகச்சேரி பகுதியை சேர்ந்த 18 மற்றும் 22 வயதுடைய இரு இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது இ தாமே தாக்குதலை மேற்கொண்டனர் என ஒப்புதல் வாக்குமூலம் அளித்தனர் எனவும் இ தாக்குதல் நடத்துமாறு தமக்கு வெளிநாட்டில் இருந்து 30 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டதாகவும் வாக்குமூலத்தில் தெரிவித்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதனை அடுத்து இ யாழில் இடம்பெற்ற பல்வேறு தாக்குதல் சம்பவங்களுடன் கைது செய்யப்பட்டுள்ள நபர்களுக்குத் தொடர்பிருக்கா என பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பைஸர் தடுப்பூசிகளை மாத்திரம் இறக்குமதி செய்யத் தீர்மானம்!

எதிர்காலத்தில் பைஸர் தடுப்பூசிகளை மாத்திரம் நாட்டுக்கு இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளோம் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

முதலாவதுமற்றும்2ஆவதுடோஸ்களை வழங்குவதற்குப் போதுமான ஏனைய தடுப்பூசிகள் நாட்டில் இருப்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அதற்கமைவாக 1.45 கோடி பைஸர் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் தேவையான தடுப்பூசிகளை வாராந்த அடிப்படையில் விநியோகிக்க உற்பத்தியாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம்இதற்போது பாடசாலை மாணவர்களுக்குத் தடுப்பூசி செலுத்துவதும் பூஸ்டர் டோஸை வழங்குவதுமே சுகாதார அதிகாரிகளின் பிரதான இலக்கு எனவும் அவர் தெரிவித்தார்.

# இலங்கை இருளில் மூழ்கப் போவதாக மக்கள் விடுதலை முன்னணி ஆரூடம்



இலங்கை அடுத்த மாதம் முதல் இருளில் மூழ்கப் போவதாக மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

பெலவத்தையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசெம்பர் மாத இறுதியில் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் நிலக்கரி தீர்ந்துவிடும் என்றும் அன்றிலிருந்து நாட்டு மக்கள் இருளில் இருக்க வேண்டிய நிலை ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பழுது நடவடிக்கை காரணமாக சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் மூடப்படவில்லை என்றும் மசகு எண்ணெய்க்குச் செலுத்த வேண்டிய டொலர் இல்லாத காரணத்தினால்தான் மூடப்பட்ட தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ள நிலையில், விமானநிலையத்துக்கானஎரிபொருள் நிறுத்தப்பட்டு ஸ்ரீலங்கன் விமான சேவையும் நிறுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொவிட்டுக்கு எதிரான மாத்திரை இறக்குமதி தொடர்பாக அடுத்த வாரம் இறுதித் தீர்மானம்

மோல்னுபிராவிர் என்ற கொரோனா வைரஸுக்கு எதிரான மாத்திரையை இலங்கைக்கு இறக்குமதி செய்வது தொடர்பில் அடுத்த வாரம் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மருந்துப் பொருள்கள் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் மெர்க் நிறுவனம் உட்பட பல நிறுவனங்கள் தயாரித்துள்ள இந்த மாத்திரையை இலங்கைக்கு வழங்க விருப்பம் தெரிவித்துள்ளன எனவும், இந்த உற்பத்தியாளர்களின் உள்ளூர் முகவர்கள் இது தொடர்பாக அரச மருந்துக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்பில் இருக்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரஸுக்கு எதிராக மோல்னுபிராவிர் மருந்தைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை கொரோனா தொழில்நுட்பக் குழு நவம்பர் 15 ஆம் திகதி வழங்கியது.

இந்த மாத்திரை அமெரிக்க மருந்து நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட கொரோனா நோய்க்கான முதல் வைரஸ் தடுப்பு மருந்தாகும், இது ஊசி அல்லது நரம்பு வழியாகக் கொடுக்கப்படுவதை விட மாத்திரையாக எடுக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்




## பக்தி மார்க்கம்

பிரம்மனும் விஷ்ணுவும் அடி முடி காணாத ஆனந்தக் கூத்தர். அடியவருக்கு அடியவர். கல்லால மரத்தடியில் ஞானம் உபதேசித்தவர். கங்கையைசடையில் தரித்தவர். மான் மழுவுடன், சுடலையில் ஆடும் பித்தர் அவர். அவரை அடைதல்தான் ஆன்ம மோட்சத்துக்கான ஒரே வழி. அவ் இறைவனை அடைதலுக்கான முதல் படி உணர்தல்.

இறைவனை உணர்தல் என்பது ஒரு கற்கை நெறி அல்ல. ஒரு செயல்பாடு அல்ல. அது ஒரு தவம். மனத்தால் உணர்தல், அதனை உரைத்தல், உருகி மெய்ப்படுத்தல், அவனால் – அவன் அருளால் ஆற்றுப் படுத்தப்படல் அல்லது தடுத்தாட்கொள்ளப் படல் என பலவாறான நிலைகளை கடத்தல். அதற்கு இறைவனை அகக் கண்ணால் அறிய முற்பட வேண்டும். இறைவனை அகக்கண்களால் அறிதலுக்கு ஞானமும் தேவையாக இருக்கும். ஆத்மாவின் பக்குவத்தன்மையும் தேவையான ஒன்று. ஞானம் நாவினால் நவில்வது அன்று. அது உணர வேண்டியது. அந்த ஞானமே பக்குவத்தையும் தரவல்லது.

ஞானத்தை உணர்தல் என்பதே அஞ்ஞானத்தை போக்கலுக்கான படிநிலை. ஞானத்தை உணர குருவழியே ஒரே மார்க்கம். ஆனால், குரு எனப்படுவது ஓர் ஆசிரியரோ அல்லது ஆசானோ அல்ல. குரு ஞானத்தை ஆத்மாவுடனான உரையாடலில் உபதேசிப்பவர். தேடல்களுக்கும் கேள்விகளுக்கும் பதில் தருபவர் அல்ல மாறாக தேடலையும் கேள்விகளையும் அடிப்படையாகக் கொண்டு ஞானத்தை விருத்தி செய்ய வழிகளை சமைப்பவர். அதனாலேயே குரு எப்போதுமே சிவமாக பாவிக்கப்படுகின்றார்.

அப்படிப்பட்ட ஞான குருவை அடைதலுக்கான ஒரே வழி, பக்தி மார்க்கம். சிவனை, அப்பனாக, அம்மையாக, நண்பனாக, மெய் அன்புடன் காதலித்து மனம் உருகிவேண்டுதல். மாணிக்கவாசகர் கூறியது போல, அழுதால் உன்னை பெறலாமே என்பது தான் பக்தியின் விளக்கம். ஆதலால், இறைவனை அடைதலுக்கு அவனை உணர்தல் அவசியமாகின்றது. உணர்தலுக்கு பக்தி மார்க்கம் அவசியமாகின்றது.

இறைவன் ஆனந்தமே வடிவானவன். பொன்னோ, பொருளோ, கல்விச் சிறப்போ, சமுதாய நிலையோ அவனுக்கு எதுவுமல்ல. தூய உள்ளத்திலிருந்து அன்பை மட்டுமே எதிர்பார்க்கும் அவனுக்கு, யாவரும் சமம். அந்த பரமானத்த கூத்தரின் பாதார விந்தங்களை இறுக பற்றிக்கொள்வோம். அது தான் ஆன்ம மோட்சம். அதற்கு உள்ளன்போடு காரியமாற்றுவோம். பெரிது சிறிது, வல்லவன் இழைத்தோன் என பேதங்களை கடந்து, பக்தி மார்க்கம் போவோமேயானால், எம் கரம் பிடித்து ஞானம் போதிக்க மார்க்கண்டேயனை ஆட்கொண்டவர் எம் அருகிலேயே நிற்கின்றார் என்பதனை உணருவோம். அதுவே எங்களை வழிப்படுத்தும்.

**ஜனகன் முத்துக்குமார்,**
**(சட்டத்துறை விரிவுரையாளர், கனடா.)**

## அர்த்தச் சக்கராசனம்




இந்த ஆசனமானது பாதிச்சக்கரம் போன்று தோற்றமளிப்பதால் அர்த்த சக்கராசனம் என்று பெயர் வந்தது. இது பாத ஹஸ்தாசனத்தின் மாற்றுப் பயிற்சியாகும்.

**செய்முறை :**

1. உடலைநேர்கோட்டில் வைத்தவாறு (துடாசனத்தில்) நிற்கவும்.

2. இரு மணிக்கட்டுப் பகுதிகளும் ஒன்றுடனொன்று ஒட்டியவாறு இரு உள்ளங்கைகளினாலும் இடுப்பின் பின்புறத்தை அழுத்திப் பிடிக்கவும். அதாவது இரு சிறுநீரகங்கள் அமைந்துள்ள நாரிப்பகுதியை அழுத்தியவாறு இருக்க வேண்டும்.

3. பின், மூச்சை உள்ளிழுத்தவாறு இடுப்பிலிருந்து பின்புறம் நன்றாக வளைந்து, கழுத்தையும் நன்றாக வளைத்து முகமானது பின்நோக்கிப் பார்த்தபடி இருக்கவும். இந்த நிலையில் சாதாரண சுவாசம் கொள்ளவும். – உச்ச நிலை

4. பின்னர் மூச்சை வெளிவிட்டபடி நேரான நிலைக்கு வந்து உள்ளங்கைகளை விடுவித்து ஆரம்ப நிலைக்கு வரவும். – இவ்வாறு மூன்று தடவைகள் செய்யவும்.


**பயன்கள் :**

உடம்பின் முன்புறத் தசைகள், கெண்டைக் கால் தசைகள், இடுப்பு, விலா பகுதித் தசைகள் முறுக்கேறும். முதுகுத் தண்டு வடம் வளைந்து கொடுக்கும் தன்மை பெறுவதால் வீரியத்தன்மையும் வலிமையும் பெறுகின்றது. சுவாச உறுப்புக்கள் சீரடையும். மேலும் ஆஸ்மா, முதுகுவலி, நாரி வலி, கழுத்து வலி, தசைப்பிடிப்புக்கள் மற்றும் சிறுநீரகம் சம்பந்தமான அனைத்து நோய்களும் குணமாகும். ஆண்மை மற்றும் பெண்மை நீடித்து நிலைக்கும். பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் கோளாறுகள், கர்ப்ப ரீதியான உடலியல் செயற்பாட்டு நோய்களுக்கு சிறந்த ஆசனம். மார்புக்கூடு விரியும். மார்புச் சளி, காசம், தைரொயிட் சம்பந்தமான பிரச்சினைகள் நீங்கும். முதுகெலும்புக் கூடாக செல்லும் நரம்புகள் முறுக்கேறும்.

**- ஸ்ரீ. நதிபரன் -**
**(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்) (தொ.இல 077-1041455)**



## நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை



*தலம்: கந்தசுவாமி*
*இடம்: நல்லூர்*

தனதனன தனதனன தனதனன தனதனன
தனதனன தனதனன – தனதான

உதரகம லமதிலுதி புதியபுவ னமதுபடை
பிரமனுறு செருவையழி – பெருவேலா
உவகையொடு மகளிரறு வரதுமுலை
யமுதுபெறு
அறுமுகன தெனவுமுரை – வடிவேலா
அதிமதுர குறுமுனிவ னுனதுதிரு வடிபணிய
அரியதமி ழுதனையளி – புலவோனே
அறிவுமறி வதனிலுள செறியுபல
னெறிமுறையும்
அடியவனு மறியறிவு – அருளாயோ?

அதிரநடை புரியவரு
விடையதனி லமருசிவ
னறியசெவி
பொருளையுரை – குருநாதா
அகிலமது துயரமற
யசுரகிளை யவைகளற
அமருமெழ கிருபைபுரி
– குமரோனே
இதமதிக அவரைபொரி பயறினொடு
துவரையவ
லமுதுசெயு கரிமுகவ– னிளையோனே
இனிமைதரு முனதடிய ரிசைவுபெற
முருகனென
எழிலுறுநல் லையினிலுறை– பெருமானே!

**- கவிஞர் குகதாசன் -**

# எல்லோரும் எல்லாம் பெறட்டும்

**- சிரவை ஆதீன முதல்வர் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் -**
**(கௌமார மடாலயம், சின்னவேடம்பட்டி, கோயம்புத்தூர்)**



மனிதன் சாதாரணமாகத்தான் பிறக்கிறான். ஆயினும் அவனுடைய வளர்ச்சிக்குரிய வாயில்கள் ஏராளம். 'வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்' என்று தேவாரம் கூறும். மானுடம் வளர, வாழத் திருவள்ளுவர் காட்டும் நெறி, ஆம் கற்க என்றார். கற்ற நூலின் கருத்துக்களின் வழி நின்று அறிவை வளர்க்க வேண்டும்.

அறிவுடையவர்க்கு அழகு என்ன தெரியும் என்பதல்ல; என்ன செய்யத் தெரியும் என்பதுதான். அதனால் தான் வள்ளுவர் அறிவைச் செயலுடைய தொடர்புடைய கருவியாக்கினார். 'அருவி அற்றம் காக்கும் கருவி' என்றார். துன்பமும் துயரமும் இயற்கையுமல்ல; நிலையானவையுமல்ல. அறிவினைக் கருவியாகக் கொண்டு துன்பத்தினை வெல்ல வேண்டும். நல்ல நிறைவான, பாதுகாப்பான, மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அறிவு கருவியாகப் பயன்படுதல் வேண்டும். அறிவைக் கருவியாகக் கொண்டு பாதுகாப்பான வாழ்க்கை அமைத்துக் கொள்ளுதல் ஆகும். அறிவைக் கருவியாகப் பயன்படுத்த, வாழ்க்கையை இயக்க உந்து சக்தி ஒன்று வேண்டும். அந்த உந்து சக்தி எது? அந்த உந்து சக்திதான் ஊக்கம். ஊக்கம் உள்ளத்தைச் சார்ந்தது. சோர்வும், பயமும் ஊக்கத்திற்கு பகை. 'உள்ளம் உடைமை' என்றார் வள்ளுவர். ஊக்கத்தின் வெளிப்பாடு முயற்சி. உழைப்பு முயற்சியை ஆள்வினை அறிவறிந்த ஆள்வினை என்பது திருக்குறள். அறிவறிந்த ஆள்வினையே ஆகும். அறிவறிந்த ஆள் வினையே பயன் தரும். அறிவறிந்த அறிவின் மூலம் ஒவ்வொருவரும் பிறருக்குத் துணையாக இருக்க வேண்டும். நாம் தக்கவர்களை துணை பற்றினால் எல்லா நலன்களும் உண்டாகும். தக்கார் யார்? பெரி யோரோ தக்கார் ஆவார். பெரியாரைத் துணை கொள் என்பார் ஔவையார். பெரியோர் யார்? செயற்கரிய செய்பவர்களே பெரியவர்கள். செயற்கரிய செய்வார் பெரியர் என்பார் திருவள்ளுவர்.

# ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கான உரிமையை எவரும் தடுக்கவே முடியாது

## அரசின் பங்காளியான சு.க. அதிரடி

எதிர்க்கட்சியினர் என்ற ரீதியில் ஆர்ப்பாட்டத்தை முன் னெடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை காணப்படு கின்றது. ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கான உரிமையை எவராலும் தடுக்க முடியாது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் புதிய தொகுதி அமைப்பாளர்களை நியமிப்பதற்கான நேர்முகத் தேர்வு கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றபோது ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்–

எதிர்க்கட்சியினர் என்ற ரீதியில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை காணப்படுகின்றது. எவ்வாறிருப்பினும் கொரோனா நிலைமையைக் கருத்தில்கொண்டு அதற்கு ஏற்றால்போல் ஏற்பாடுகளைச் செய்திருக்கலாம். காரணம் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் அவை தொடர்பில் கவனம் செலுத்த முடியாது.

பெரும்பாலானவர்கள் ஒரே இடத்தில் கூடியிருக்கும்போது எவ்வாறு தொற்று பரவும் என்பதை அனைவரும் அறிவர். எவ்வாறிருப்பினும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கான உரிமையை எவராலும் தடுக்க முடியாது. நாம் வேறு பயணத்தை ஆரம்பிக்கவில்லை.



மாறாக கட்சியை மேலும் வலுப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். கட்சியை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வோம் – என்றார்.

# யாழில் நாவலர் சிலை திறப்பு



(இ.கலையமுதன்)

நாவலர் கலாசார மண்டபத்தின் நுழைவாயிலில் யாழ். மாநகர சபையின் உறுதுணையுடன் சைவ மகா சபையால் நிறுவப்பட்ட நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது.

கார்த்திகை தீபத் திருநாளான நேற்று காலை 10.30 மணியளவில் இறை வணக்கம் செலுத்தப்பட்டு நந்திக்கொடி ஏற்றப்பட்டதுடன் நாவலர் பெருமானின் சிலை திறந்துவைக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் பிரதி மாநகர ஆணையாளர் பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன், அகில இலங்கை சைவ மகா சபையின் பொதுச்செயலாளர் பரா.நந்தகுமார் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

'பருவ கால மழை நீர் முகாமையும் திருக்கோவில் குளங்களும்' எனும் தலைமையில் சர்வராசாவின் சிறப்புரையும் இதன்போது இடம்பெற்றது.

# சிவபூமி அறக்கட்டளை நிதியம் அமைத்த கீரிமலை முதியோர் இல்லம் நேற்று திறப்பு



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

சிவபூமி அறக்கட்டளை நிதியத்தால் கீரிமலையில் அமைக்கப்பட்ட முதியோர் இல்லம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு திருமுருகனின் முயற்சியின் பயனாக சிவபூமி அறக்கட்டளையினரால் முதியோர் இல்லம் அமைக் கப்பட்டு நேற்று பலரின் பங்குபற்றலுடன் வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நல்லூர் ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆன் மீகச்சுடர் ரிசி தொண்டுநாத சுவாமிகள், யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராசா, யாழ்.மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# அம்பாந்தோட்டைத் தொழிற்சாலையில் 45 இந்தியப் பிரஜைகளுக்குத் தொற்று

அம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சீமெந்து தொழிற்சாலையில் பணியாற்றி வரும் 45 இந்தியப் பிரஜைகளுக்குக் கொரோனா வைரஸ்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தால் குறித்த சீமெந்து தொழிற்சாலையில் பணியாற்றிவரும் 50 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 45 இந்தியப் பிரஜைகளுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான தொழிலாளர்கள், அம்பாந்தோட்டை பழைய வைத்தியசாலையில் உள்ள கொரோனா சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

குறித்த தொழிற்சாலையில் தமிழர்கள், சிங்களவர், இந்தியர்கள் உள்ளடங்கலாக 1,160 ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

சுமார் 480 இந்தியர்கள் குறித்த தொழிற்சாலையில் பணியாற்றி வருகின்றனர். தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# அவசரமாகக் கூடுகின்றன பிரதான முஸ்லிம் கட்சிகள்

வரவு – செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பில் நடந்து கொள்ள வேண்டிய விதம் குறித்து தீர்க்கமான தீர்மானமொன்றை எடுப்பதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் ஆகிய கட்சிகள் அவசரமாகக் கூடவுள்ளன.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் போது முஸ்லிம் எம்.பிக்கள் அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வாக்களித்ததால் அதேபோன்று இம்முறை வரவு – செலவுத் திட்டத்திலும் அவர்கள் அப்படி நடந்து கொள்ளலாம் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இதையடுத்தே இந்த கூட்டங்கள் நடக்கவுள்ளன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அக்கட்சியிலிருந்து விலகிய முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெமீல் மீண்டும் கட்சியில் இணைவது குறித்து அன்று பேசப்படவுள்ளது. அதேபோல் பட்ஜட்டை எதிர்த்து வாக்களிப்பதா அல்லது இறுதிவாக்கெடுப்பை தவிர்ப்பதா என்பது குறித்தும் பேசப்படவுள்ளது.

இதற்கிடையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், நாளை சனிக்கிழமை கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கவுள்ளார். வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பது என்ற தலைமையின் முடிவை அவர் அன்றைய தினம் விவரிக்கவுள்ளார் என்று அறியமுடிந்தது.

### பிரித்தானிய தூதருடன்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மாகாணசபை தேர்தல்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

தமிழர்கள் ஒருமித்த நிலைப்பாட்டில் சம்பந்தப்பட்ட தரப்புகளை வலியுறுத்துவது, அதன் முக்கியத்துவம், அதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அவற்றின் முன்னேற்றம், ஆதரவு தரப்புக்கள், எதிர்கால நகர்வுகள் என்பன பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.

நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதாரச் சிக்கல்கள், தமிழ் மக்களும் நாட்டு மக்களும் முகம் கொடுக்கும் அவலங்கள், கொரோனா நோய்த் தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகளின் தற்போதைய நிலை என பிற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்த சந்திப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

– சுரேந்திரன், ஊடகப் பேச்சாளர் ரெலோ, தமிழ் தேசியக் கூட்டமைப்பு.

– இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -076 443 8622
காலைக்கதிர் Kalaikkathir